சார்பு நீதிமன்றம் மதுராந்தகம்

MCOP No. 5/2021

பெயர். திருமதி. ரேகா நாள் 25.07.2025
க /பெ. பாரதி

**மனுதாரர் சா.1 அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

1) நான் தற்பொழுது வீட்டில்தான் உள்ளேன். விபத்தின் போது தனியார் நிறுவனத்தில் பணி புரிந்து வந்தேன். மேற்கண்ட விவரத்தை என் மனுவில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. எப்பொழுது வேலை விட்டு நின்றேன் என்றால் விபத்திற்கு பிறகு நான் வேலைக்குச் செல்லவிலலை. என்னால் நிற்க முடியவில்லை என்பதால் வேலையை விட்டு நின்று விட்டேன். என் கணவர் மெக்கானிக்காக வேலை செய்கிறார். விபத்து நடந்த இடத்தில் வெளிச்சம் இல்லை என்று சொன்னால் லைட் எரிந்து கொண்டிருந்தது. வேனில் 12 நபர்கள் பயணம் செய்தோம். வேனில் 2 பிள்ளைகள் மட்டும்தான் இருந்தார்கள். கீழே ஓரமாக நின்று கொண்டிருந்தோம். வேனிற்கு முன்பு 10 அடி தள்ளி நின்று கொண்டிருந்தோம். புலன்விசாரணை அதிகாரியின் வரைபடம் பார்த்தால் விபத்து எவ்வாறு ஏற்பட்டது என்பது தெரியவரும் என்றால் சரிதான்.

2) புகார், மனு மற்றும் முதல் விசாரணையில் நின்று கொண்டிருந்த வேன் மீது லாரி மோதி, வேன் எங்கள் மீது மோதியதாக குறிப்பிட்டுள்ளோம் என்றால் சரிதான். லாரி இடித்து வேன் எங்கள் மீது வந்து மோதியது. மோட்டார் வாகன ஆய்வறிக்கை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எங்கள் வேன் ஓட்டுநர் வாகனத்திற்கு பின்புறம் தான் சக்கரத்தைக் கழற்றி மாற்றிக் கொண்டிருந்தார் என்றால் சரிதான். அவருக்கு எந்த காயமும் ஏற்படவிலலை என்றால் சரிதான். குற்ற வழக்கின் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

லாரி, வேன் மீது மோதியதை நிரூபிக்காத வரையில் நான் கூறுவதுபோல் விபத்து நடைபெற வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. வேனின் வலது புறம் நின்றேனா அல்லது இடது புறம் நின்றேனா என்றால் வேனின் முன்புறம் 10 அடி தள்ளி நின்று கொண்டிருந்தேன்.

3) மதுராந்தகத்தில் சென்னை நோக்கி செல்லும் புற வழிச்சாலை கீழிருந்து மேல் நோக்கி செல்லும் என்றால் சரிதான். இரண்டு வாகனங்கள் தான் செல்ல இயலும் என்றாலும், ஒரு வாகனம் நின்றால் அந்த வாகனத்தின் வலது புறம் சென்றுதான் செல்ல இயலும் என்றால் சரிதான். லாரிக்கு முன்பு ஏதேனும் வண்டி சென்றதா என்றால் செல்லவில்லை. புகாரே தவறானது என்றால் சரியல்ல. லாரி மீது எவ்வித தவறும் இல்லை என்றாலும், 2ம் எதிர்மனுதாரரைப் பொறுத்து மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றாலும் சரியல்ல. மருத்துவ செலவீன ரசீதுகளில் தொகைகள் அதிகப்படுத்தி தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை – இல்லை